**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண்.158/2024**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ம் நாள் புதன் கிழமை PW2 -இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 20.08.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | நவீன் குமார் (PW2) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது | |

<u>சாட்சி நீதிமன்றம் மூலம் அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தரங்கம்பாடி தாலுக்காவில் சார் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 2023 ம் ஆண்டு 10 வது மாதம் சீர்காழி தாலுக்காவில் பணியாற்றினேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள சொத்தை நான் அளவீடு செய்தேன். நான் அளிவீடு செய்த பின்னர் அளவீடு செய்ய பணம் கட்டிய மல்லிகை என்பவருக்கு என்னிடம் காண்பிக்கப்படும் வரைபடத்தை தயார் செய்து கொடுத்தேன். **அது வா.சா.ஆ. 5 ஆக குறியீடுசெய்யப்படுகிது.**